V. GOVERNMENT MOTION

Motion re Suspension of Rule 42 of the Council Rules

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN : Mr. Deputy Chairman, Sir, I move—

"That rule 42 of the Tamil Nadu Legislative Council Rules be suspended with reference to the limitation laid down in sub-rule (3) thereof and that more than one matter under that rule be permitted to be raised to-day"

DEPUTY CHAIRMAN : The question is—

"That rule 42 of the Tamil Nadu Legislative Council Rules be suspended with reference to the limitation laid down in sub-rule (3) thereof and that more than one matter under that rule be permitted to be raised to-day."

The motion was put and carried.

VI. CALL ATTENTION NOTICES

(1) *Calling attention to the Immediate Release of Waters in the Pullambadi and Kattalai Channels*

திரு. டி. கே. சுப்பையா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மைசூர் மாநிலத்திலுள்ள கிருஷ்ண சாகர் தேக்கத்தில் நீர் மட்டம் உயர்ந்துவிட்டதாலும், மேட்டூர் தேக்கத்தில் நீர் மட்டம் உயர்ந்துள்ளதாலும், காலக் கிரமத்தில் சாகுபடி செய்ய புள்ளம்பாடி, கட்டளை வாய்க்கால்களில் விரைவில் தண்ணீர் விடுதலைக் குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து 42 வது விதியின் கீழ் மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். 4-40 p.m.

மாண்புமிகு திரு, எஸ். ஜே. சாதிக் பாஷா : கட்டளை, புள்ளம்பாடி வாய்க்கால்களின் பொதுவான திறக்கும் தேதி ஆகஸ்டு மாதம் 1-ம் தேதி. ஆகஸ்டு மாதம் முதல் தேதியிலிருந்து செப்டம்பர் மாதம் 15-ம் தேதி வரை பொதுவாக தண்ணீர் விடப்படும் தேதியாகும். ஆகஸ்டு மாதம் 1-ம் தேதி மேற்சொன்ன கால்வாய்களை திறக்க மேட்டூர் அணைக்கட்டில் குறைவான கொள் அளவு 57,341 மில்லியன் கன அடியும் அதன் மட்டம் 94' ஆகவும் இருக்க வேண்டும். இந்த வருடம் ஆகஸ்டு 1-ம் தேதியின் கொள் அளவு 19,820 மில்லியன் கன அடியும் அதன் மட்டம் 53.10 அடியாக இருந்தது. மேட்டூர் நீர்த்தேக்கத்தின் கொள் அளவு 44,649 மில்லியன் கன அடியும் அதன் மட்டம் 82.65 ஆக இருந்தபொழுது இந்தக் கால்வாய்கள் செப்டம்பர் 1-ம் தேதி திறக்கப்பட்டன. இந்தக் கால்வாய்கள் செப்டம்பர் மாதம் 1 முதல் 1971 ஜனவரி மாதம் 15-ம் தேதி வரையில் திருச்சி, தஞ்சை மாவட்டங்களுக்கு முழுநீள ஆயக்கட்டு பாசனத்திற்காகத் திறக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு குறுகியகால பயிருக்கு மட்டும் தண்ணீர் விடப்படும். புள்ளம்பாடி வாய்க்காலின் நேர் ஆயக்கட்டு 8,831 ஏக்கரும், குளங்கள் மூலமாக ஆயக்கட்டு 22,114 ஏக்கரும் ஆகும். புது கட்டளை மேல் மட்ட வாய்க்காலின் நேர் ஆயக்கட்டு 8,622 ஏக்கரும் குளங்கள் மூலமாக ஆயக்கட்டு 12,000 ஏக்கரும் ஆக மொத்தம் 20,622 ஏக்கரும் ஆகும்.